**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 210/2022 P.W. 01 / LW 01 (புகார்தாரர்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **வீராசாமி** | **Caste** | : | |
| **Father's Name** | : | தங்கராசு | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.03.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் இந்த வழக்கின் ஆஜர் எதரிகளான விக்னேஷ், ராமச்சந்திரன், போஸ், ஆசைதம்பி மீது கொடுத்தேன். எனக்கும் ஆஜர் எதரிகளுக்கும் வேலி தகராறு இருந்தது. 17.01.2019 மாலை 06.00 மணிக்கு ராஜாலி குடிக்காட்டில் டீக்குடித்து விட்டு சைக்கிளிலில் என் வீட்டு வாசலுக்கு வந்து நின்றேன். ஆஜர் எதரிகள் நால்வரும் அங்கு நின்றார்கள். அதில் விக்னேஷ் கையில் கம்பியுடன் நின்றார். சைக்கிளை விட்டு நான் இறங்கியதும், விக்னேஷ் இரும்பு ககம்பியால் தலையில் பின்பகுதியில் அடித்தார். சாட்சி தன்னுடைய வலது கையை தனது தலையின் பின்பகுதியில் வைத்து காண்பிக்கிறார்.

2) நான்கு பேரும் தகாத வார்த்தைகளால் என்னை திட்டினார்கள். கொச்சை வார்த்தைகளில் பேசினார்கள். அவர்கள் என்னை குச்சிக்காரி மவனே, தேவடியா மகனே என்று திட்டினார்கள். என் மனைவி நவமணி ஓடிவந்து என்னை தூக்கினார். என் தம்பி மற்றும் மனைவி என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றாரகள். அங்கு வந்த போலீசாரும், மருத்துவரும் என்னை விசாரித்தார்கள்.

3) நீதிமன்றத்தில் காட்டடப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் எ்னனை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) என்னுடைய வீடு மெயின் ரோட்டில் இருந்து 50 அடி தூரத்தில் இருக்கும் என்றால் - சரி்தான். மெயின் ரோட்டில் என் வீடு இல்லை எனறால் - சரிதான். என் மனைவி சம்பவ

நேரத்தில் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் - சரிதான். சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் என்னையும் ஆஜர் எதிரிகளையும் தவிர வேறு யாரும் இல்லை என்றால் - சரிதான். சத்தம் கேட்டு தான் மற்ற நபர்கள் அனைவரும் வந்தார்கள் என்றால் - சரிதான்.

2) சம்பவ முடிந்து 06.00 மணிக்கெல்லாம் மருத்துவமனைக்கு கூட்டிசெல்லப்பட்டேன். நான் சுய நினைவுடன் தான் இருந்தேன். 6 mm கம்பியால் தான் பின்னாடி இருந்து அடித்தார் என்றால் - சரிதான்.

3) நான் கீழே விழுந்ததில் எனக்கு தலையிலும் கையிலும் காயம் ஏற்பட்டது என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் - அவ்வாறு சொல்லவில்லை. வேலி தகராறு குறித்த விபரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் - ஆம் சொல்லியுள்ளேன். எனக்கு காயம்பட்ட விபரத்தை மருத்துவர் பார்த்து தான் குறித்து கொண்டார் என்றால் - சரிதான்.

4) போலீசார் புகார் கொடுத்த அன்று தான் விசாரித்தார்கள். அதன் பிறகு விசாரிக்கவில்லை. போலீசார் நான் கொடுத்த வாக்குமூலத்தை என்னிடம் படித்து காட்டவில்லை. நான் போலீஸ் வாக்குமூலத்தில் கையொபப்பம் செய்தேனா என்றால் - இல்லை.

5) 17.01.2019 அன்று கண்ணிபொங்கல் என்றால் - சரிதான் அன்றையதினம் சிறப்பான கோவில் விசேஷம் என்றால் - சரிதான். தெருவில் உள்ள நபர்கள் கோவில் விழாவிற்கு சென்றுகொண்டிருந்தார்கள் என்றால் - சரிதான். எனக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் - சரியல்ல. குடிப்பழக்கம் இலலை என்று நான் தற்சமயம் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

6) அன்றைய தினம் நான் குடிப்போதையில் எனக்கே அறியாமல் அதீத போதையில் போவோர் வருவோரிடம் தகராறு செய்து அதில் நானே கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் - சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**
**C.C.No. 210/2022 P.W. 02 / LW 02 (கண்ணுற்ற சாட்சி)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **நவமணி** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. வீராசாமி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.03.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடுத்தனம் செய்து வருகிறேன். அசா.1 என்னுடைய கணவர். இந்த வழக்கின் ஆஜர் எதரிகளான விக்னேஷ், ராமச்சந்திரன், போஸ், ஆசைதம்பி மீது கொடுத்தோம்.

2) 17.01.2019 மாலை 06.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தேன். என் வீட்டு வாசலில் விக்னேஷ் கம்பியை வைத்து தலையின் பின்பக்கமாக அடித்தார். மற்ற எதிரிகள் அனைவரும் மிரட்டினார்கள். கெட்ட வார்த்தைகளால் எனது கணவரை திட்டினார்கள். தேவடியா மகனே, குச்சிகாரி மகனே என்றும் திட்டினார்கள். அடிப்பட்ட எனது கணவர் கீழே விழுந்தார். நான் சிகிச்சைக்காக எனது கணவரை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

2) இந்த சம்பவம் மாரிமுத்திற்கும் மற்றும் முருகானந்ததிற்கும் தெரியும் . ஆனால் அவர்கள் சாட்சியம் சொல்லமாட்டார்கள். அவர்கள் எதிரிகள் பக்கம் தான் இருப்பார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u> : <u>**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**</u>

1) நான் சம்பவத்தின்போது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தேன். போலீசார் என்னிடம் எப்போது வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் 17.01.2019 அன்று என் வீட்டில் வைத்து வாக்குமு்லம் பெற்றார்கள். போலீசார் விசாரணையின் போது விட்டு வாசலில் நின்றேன் என்பதை நான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் - ஆம் சொன்னேன்.

அவ்வாறு சொல்லவவில்லை என்றால் - சரியலல். இடம் சம்மந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை உள்ளதை போலீசாரிடம் சொன்னேனா என்றால் - ஆம் சொன்னேன்.

2) எனது கணவரை தாக்கியதாக சொல்லப்படும் கம்பி 4 அடி இருக்குமா என்றால் - ஆம் இருக்கும். எனது கணவர் ஆட்டுக்கறி வியாபாரம் செய்து வருவதால் சாட்சிகள் மாரிமுத்து மற்றும் முருகானந்தத்திற்கு பொறாமை இருந்து வருவதால் எங்களுக்கு ஆதரவாக சாட்சியம் சொல்லமாட்டார்கள் என்றால் - சரிதான்.

3) சம்பவத்தன்று எனது கணவர் அதிகாமாக குடித்திருந்தார் என்றால் - இலலை. கொஞ்சமாக குடித்திருந்தார். குடிப்போதையில் தாறுமாறாக நடந்து கொண்டதில் என் கணவர் கீழே விழுந்து காயம்பட்டார் என்றால் - சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிறகும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் - சரியல்ல.

4) சம்பவத்தன்று எனது கணவர் அதீத குடிப்போதையில் தவறுதலாக நடந்து கொண்டதால் தனக்கு தானே காயம் ஏற்பட காரணம் ஆனார் என்றாலும் எனது கணவருக்கு ஆதரவாக உண்மை சம்பத்தை மறுத்து பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/---------------------------

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**மன்னார்குடி.**